**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 16.05.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது 5 நாடுகளின் சுற்றுப் பயணத்தின் 2ஆம் கட்டமாக நெதர்லாந்து சென்றுள்ளார்.

வரும் 2047ஆம் ஆண்டிற்குள் போதைப்பொருள் இல்லா இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று, சிக்கிம் மாநிலத்திற்குச் சென்றுள்ளார்.

புதுடெல்லி வந்துள்ள ஈரான் மற்றும் உகாண்டா வெளியுறவுத் துறை அமைச்சர்களுடன், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

*சிக்கிம் உதயதினம் - 1(15)*

சிக்கிம் மாநில உதய தினத்தை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் தொன்மை வாய்ந்த கலாச்சார பாரம்பரியத்தில் வேரூன்றிய இயற்கை எழில் சூழ்ந்த சிக்கிம் மாநிலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்திருப்பதுடன் தேசத்தின் வளர்ச்சிக்கு நீடித்த உதாரணமாக திகழ்வதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

சிக்கிம் மாநில நிறுவன தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள ஊடகப்பதிவில், நாட்டின் வளர்ச்சியில் சிக்கிம் மாநிலம் அளித்துள்ள பங்களிப்பு மதிப்பதற்குரியதாக உள்ளது என தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு அம்மாநிலம் தனது 50ஆவது உதய தினத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிக்கிம் மாநிலத்தின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்றும், சிக்கிம் மாநில மக்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வாழ்த்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

*சிக்கிம் உதயதினம் -2 (15)*

சிக்கிம் மாநில உதய தினத்தையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். உலகின் முதல் இயற்கை விவசாயிகளைக் கொண்ட சிக்கிம் மாநிலம், ஒட்டு மொத்த தேசத்திற்கும் சிறந்த உதாரணமாக திகழ்வதாக, புகழாரம் சூட்டியுள்ளார். சிக்கிம் மாநில மக்கள் தங்கள் வாழ்வில் அனைத்து வளங்களையும் பெற்று புதிய உச்சத்தை தொட தாம் வாழ்த்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

*மோடி – 1 (17)*
*மோடி – 2 வாய்ஸ் (14)*

**(வாய்ஸ்)**

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது பயணத்தின் இரண்டாம் கட்டமாக, வருகிற 17ஆம் தேதி வரை நெதர்லாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் அவர், அந்நாட்டுப் பிரதமர் மற்றும் நெதர்லாந்தின் அரச குடும்பத்தினரை சந்தித்துப் பேசவுள்ளார். நாளை இந்திய வம்சாவளியிர் மற்றும் நெதர்லாந்து முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார். இப்பயணத்தின் போது இந்திய நெதர்லாந்து இடையே, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், செமி கண்டக்டர் உற்பத்தி போன்ற துறைகளில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா—நெதர்லாந்து நட்புறவில் வாழும் அடையாளமாக தி ஹேக் திகழ்வதாக அவர் தெரிவித்தார். இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பை டச்சு தலைவர்கள் தொடர்ந்து பாராட்டுவதாக பிரதமர் தெரிவித்தார். நெதர்லாந்து, சமூகம் மற்றும் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்கு குறித்து, அனைவரும் பெருமை கொள்வதாக அவர் தெரிவித்தார். கோடிக்கணக்கான இந்தியர்களின் நம்பிக்கையும், ஆதரவும் நாட்டிற்காக அயராது உழைக்க தொடர்ந்து ஊக்கமளிக்கிறது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

*பிரதமர் -□யண வரி (10)*

வெளிநாட்டுப் பயணத்திற்கு மத்திய அரசு வரி விதிப்பதாக சமூக ஊடகங்களில் பரவும் தகவல் அடிப்படை ஆதாரமற்றது என பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், இந்த தகவல் உண்மைக்குப் புறம்பானது என்றும் அதில் எள்ளளவும் உண்மையில்லை என்றும் அவர் கூறியுள்ளார். வெளிநாட்டுப் பயணங்களுக்கு, நிபந்தனை விதிக்க வேண்டிய எந்த அவசியமும் தற்போது இல்லை என்றும், குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும், அவர்களின் வியாபாரத்தை எளிமையானதாக மாற்றவும், தமது அரசு உறுதிபூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

*சி.பி. ராதாகிருஷ்ணன்- (06)*

குடியரசு துணைத்தலைவராக பதவியேற்றுக்கொண்ட திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று முதல் முறையாக, சிக்கிம் மாநிலத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அங்கு நடைபெறும், சிக்கிம் மாநில நிறுவன தின விழாவிலும் அவர் பங்கேற்கிறார். அவருடன் அம்மாநில ஆளுநர், முதலமைச்சர் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர். மேலும், பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*அமித்ஷா -1 (17)*

வரும்2047ஆம் ஆண்டிற்குள் போதைப்பொருள் இல்லா இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார். இது குறித்த கூடுதல் தகவல்கள்...

**(வாய்ஸ்)**

*அமித்ஷா -2 வாய்ஸ (15)*

**(வாய்ஸ்)**

<u>டெல்லியில் நடைபெற்ற சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, பிரதமர் திரு.நரேந்திர மோடியின் சீரிய தலைமையின் கீழ் இந்த இலக்கை எட்ட தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார். போதைப் பொருள் கடத்தல் என்பதை சட்டம் ஒழுங்கு பிரச்சனையாக பார்க்காமல் சமூகத்தில் இவை நீண்ட கால பிரச்சனையாக இருந்து வருவதாக பார்க்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். மேலும், அடுத்த தலைமுறையினரின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு போதைப்பொருட்களின் புழக்கத்தை முற்றிலும் ஒழிக்க மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர்</u>

தெரிவித்தார். ஆப்ரேஷன் ரேஜ்பில் மூலம் 182 கோடி ரூபாய் மதிப்புடைய போதைப்பொருளை இந்தியா முதன்முறையாக பறிமுதல் செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இந்தியாவிற்குள் நுழையும் ஒவ்வொரு கிராம் போதைப்பொருளையும் அரசு கட்டுப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் துணிச்சலாக செயல்பட்ட ஒவ்வொரு வீரரையும் அவர் பாராட்டினார்.

போதைப்பொருள் *(11)*

பள்ளிக் கல்லூரிகளில் போதைப் பொருள் நடமாட்டம் உள்ளதா என்பது குறித்து உடனடியாக ஆய்வு செய்யுமாறு அதிகாரிகளுக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வுத்துறை ஆணையர் உத்தரவிட்டுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் போதைப்பொருள் விற்பனையை கண்காணிக்க அருகிலுள்ள பள்ளிகள், கல்லூரிகள், போக்குவரத்து நிலையங்கள் போன்றவற்றில் தொடர்ச்சியான சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். கள்ளச்சாராயம் தயாரிப்போர் மற்றும் போதைப் பொருட்களை சட்டவிரோதமாக சேமித்து வைப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பள்ளி, கல்லூரிகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வுத் துறை உத்தரவிட்டுள்ளது.

*ஜெய்சங்கர் (14)*

புதுடெல்லி வந்துள்ள ஈரான் மற்றும் உகாண்டா வெளியுறவுத் துறை அமைச்சர்களுடன் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அபாஸ் அராச்சியை சந்தித்து மேற்காசிய பிராந்திய சூழல் குறித்தும் அதன் உறவுகள் குறித்தும் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார். இரு தரப்பு நலன் சார்ந்த பரஸ்பர உறவுகள் குறித்து கருத்து பரிமாறிக்கொண்டதாக அவர் தெரிவித்தார். பிரிக்ஸ் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்ற அவருக்கு பாராட்டுதல்களையும் அவர் தெரிவித்தார். இதே போன்று உகாண்டா வெளியுறவுத்துறை அமைச்சரையும் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடகப் பதிவில், இந்தியா உகாண்டா இடையேயான உறவுகளை மேம்படுத்துவது குறித்து இருவரும் ஆலோசித்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

*நீட் (13)*

அடுத்த ஆண்டு முதல் ஆன்லைன் மூலம் நீட் தேர்வு நடத்தப்படும் என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், மே 12ஆம் தேதியே வினாத்தாள் கசிந்தது உறுதி செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார். முறைகேடுகளை ஒருபோதும் சகித்துக்கொள்ள மாட்டோம் என்றும் இந்த விவகாரத்தில் மிக ஆழமான சிபிஐ விசாரணை மேற்கொள்ளப்படும்

என்றும், அவர் தெரிவித்தார். வினாத்தாள் கசிவு பிரச்சனைக்கு முடிவு கட்ட அடுத்த ஆண்டு முதல் ஆன்லைன் மூலம் நீட் தேர்வு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். நாடு முழுவதும், மே 3ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வின் வினாத்தாள், முன்னதாகவே கசிந்தது உறுதி செய்யப்பட்ட நிலையில் இந்த தேர்வை தேசிய தேர்வு முகமை ரத்து செய்தது. இந்த நிலையில் ஜூன் 21ஆம் தேதி நீட் தேர்வு நடத்தப்படும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. இதற்கிடையே, நீட் தேர்வு வினாத்தாள் கசிந்த வழக்கில் தொடர்புடைய ஒருவரை மத்திய புலனாய்வுத்துறை இன்று கைது செய்துள்ளது.

*ெ□ட்ரோல் – டீசல் (12)*

பெட்ரோல் ஏற்றுமதிக்கு லிட்டருக்கு 3 ரூபாய் சிறப்பு கூடுதல் சுங்கவரி விதிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் டீசல் ஏற்றுமதிக்கான சிறப்புக் கூடுதல் சுங்க வரி லிட்டருக்கு 23 ரூபாயிலிருந்து, 16 ரூபாய் 50 காசுகளாக குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. இதே போன்று விமான எரிபொருளுக்கான சிறப்புக் கூடுதல் சுங்க வரி 33 ரூபாயிலிருந்து 16 ரூபாயாக குறைக்கப்படுவதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் உள்நாட்டு தேவைகளுக்கான பெட்ரோல் மற்றும் டீசலுக்காக வசூலிக்கப்படும் சுங்க வரியில் எந்த மாற்றமும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்டுள்ள இந்த சுங்க வரி அடுத்த 15 நாட்களுக்கு அமலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*சிவராஜ் சிங் (12)*

கிராமங்களின் வளர்ச்சியை மேம்படுத்த வரும் ஜூலை 1ஆம் தேதி முதல் யுபிஜி ராம்ஜி திட்டம் செயல்படுத்த உள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார். மஹாராஷ்டிர மாநிலத்தில் இது தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் திட்டங்களை தொடக்கி வைத்துப் பேசிய அவர் பிரதமரின் வீட்டு வசதி திட்டம் குறித்து விளக்கினார். கிராமப்புற மக்களுக்கான இத்திட்டம் வாயிலாக மஹாராஷ்டிர அரசு ஆண்டிற்கு 30 லட்சம் வீடுகளைக் கட்ட இலக்கு நிர்ணயித்திருப்பதாக அவர் தெரிவித்தார். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்டதில் 5 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருப்பதாக அவர் தெரிவித்தார். அனைத்து வீடுகளுக்கும், சூரிய மின் சக்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

*புதுச்சேரி மல்யுத்தம் (07)*

புதுச்சேரியில் இரண்டு நாட்கள் நடைபெறும் தேசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி இன்று தொடங்கியது. ராஜீவ் காந்தி உள்விளையாட்டு அரங்கில் இன்றுதொடங்கிய இந்த போட்டியில், தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, ஆந்திரா ஆகிய 5 மாநிலங்களைச் சேர்ந்த 180 வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இதில் வெற்றி பெறும் வீரர் வீராங்கனைகள் தேசிய அளவில் நடைபெறும் சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி தனது 5 நாடுகளின் சுற்றுப்பயணத்தின் 2ஆம் கட்டமாக நெதர்லாந்து சென்றுள்ளார்.

வரும்2047ஆம் ஆண்டிற்குள் போதைப்பொருள் இல்லா இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று, சிக்கிம் மாநிலத்திற்குச் சென்றுள்ளார்.

புதுடெல்லி வந்துள்ள ஈரான் மற்றும் உகாண்டா வெளியுறவுத் துறை அமைச்சர்களுடன், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RM/CN/VM